Deposition of Witnesses

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court of the Magalir Neethimandram ( Mahila Court) Coimbatore

Present: R.Nandhini Devi, M.L., D.P.M

S.C.No. 77/2019

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | NAME | எஸ்.அமுதா | 6 | CALLING | |
| 2 | FATHER'S NAME | | 7 | CASTE | |
| 3 | VILLAGE | | 8 | RELIGION | |
| 4 | TALUK | | 9 | AGE | |
| 5 | DISTRICT | | 10 | | |

Solemnly affirmed in accordance with the Provision of Act for 1873

**15.10.2020**

**முதல் விசாரணை-**

**நான் தற்பொழு கோவை மாநகர உக்கடம் குற்ற பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏற்கனவே நான் தூடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 10.11.2014 ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்தபொழுது ஐஸ்வர்யா என்பவர் கொடுத்த புகாரை பெற்ற நான் அக்காவல்நிலைய குற்ற எண் 38/2014 சட்ட பிரிவு 498 ஏ, 313, 506 (1) இ,த,ச பிவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். ஐஸ்வர்யா கொடுத்த புகார் அசா.ஆ.1 , முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ 2. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகாருடன் , கனம் குற்றவியல் நீதிதுறை நடுவர் மேட்டுபாளையம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அன்றே சாட்சிகள் ஐஸ்வர்யா, ருக்மணி, கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், கவிதா, வனிதா, ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிபவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என்பது தெரியவந்ததால் வாதியுடன் எதிரியை தேடி , கதவு எண் 407/138 ஏ அபிராமி தேட்டடர்**

பின்புரம் காரமடை ரோடு பின்புறம் அருகில் நின்று கொண்டுயிருந்த எதிரி முத்துசாமி அவர்களை வாதி அடையாளம் காட்ட 13.00 மணிக்கு அவரை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவகலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் கண்ட 2 முதல் 10 வரை உள்ள எதிரிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் 20.11.2014 ம் தேதி முன்ஜாமீன் பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் புலன் விசாரணை முடிந்து 10.12.2014 தேதி எதிரிகள் மீது இ,த.சா.498, 313. 506(1) குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை:-</u>

சம்பவம் 2010 ல் நடந்ததாகவும், புகார் 2014 ல் கொடுக்கப்பட்டதாகவும் தான் இருக்கிறதா என்றால் சரிதான். காலையில் பதிவு செய்த முதல் தகவல் அறிகை மாலை 5.00 மணிக்கு 6 மணிநேரம் பின்னிட்டு வந்ததுள்ளது என்றால் சரிதான். 10.11.2014 ல் பதிவு செய்யபட்டதாக சொல்லபபடும் 161 வாக்குமூலங்கள் 1வருடம் கழித்துதான் மேஜிஸ்ரேட் கோர்ட்டுக்கு வந்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து சோடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவர புலன்விசாரணை செய்யவில்லை தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.